**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 43/2025 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. அன்பரசன் |
| Husband/Father Name | ஜீவ காருண்யம் |
| Village /Area | சித்தேரி பஸ்டாப் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | டி.வி. மெக்கானிக் |
| Age | 41 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.10.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன விக்கி (எ) விக்கேஷ் ம் எதிரிகளும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் தான். கடந்த 04.09.2023 அன்று காலை எங்களுக்கு வந்த தகவலின் படி சித்தேரி அல்ட்ராடெக் கம்பெனி அருகில் உள்ள நீரோடையில் ஒரு நபர் இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்து. நாங்கள் நேரில் சென்று பார்த்தோம். அப்போது கழுத்து அறுப்பட்ட நிலையில் எங்களுக்கு தெரிந்த விக்கி (எ) விக்னேஷ் இறந்து கிடந்தார். அப்போது அவருடைய உறவினர்களும் அங்கு வந்தார்கள். அன்றைய தினமே மாலை சுமார் 04.00 மணியளவில் நாங்கள் சம்பவ இடத்தில் இருந்த போது போலிசார் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்தார்கள். சம்பவ இடம் குறித்து மகஜர் தயார் செய்தார்கள். அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் அங்கிருந்த நானும் எனது நண்பர் ரஞ்சித் குமாரையும்

சாட்சியக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சிக் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் சம்பவ இடத்திலிருந்து கருப்பு வெள்ளை டவல் ஒன்றும், சம்பவ இடத்திலிருந்து இரத்த கறைப்படிந்த மண் மற்றும் இரத்தக் கறை படியாக மண் சிறிதளவு கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையத தான் அது **அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

இந்நீதிமன்றத்தில் உள்ள இரத்த கறை படிந்த மண் மற்றும் இரத்தக் கறை படியாத மண் மற்றும் கருப்பு வெள்ளை டவல் தான் சம்பவ இடத்தில் இருந்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட பொருட்களாகும் அவைகள் முறையே **சா.பொ.1** முதல் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.13 17:18:36 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.